10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 233 வெள்ளிக்கிழமை ஜனவரி 12 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

பெண்ணைத் தாக்கிய வேட்பாளர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜன. 12

பெண் ஒருவரைத் தாக்கினார் என்ற குற்றச் சாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள் ளூராட்சி சபை தேர்தல் வேட்பாளர் நாகராசா பகீரதனை மானிப்பாய் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

வேட்பாளரின் மனைவிக்கும், அயல் வீட்டுப் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு வாய்த்தர்க்கமாக மாறியது. பின்னர் அயல் வீட்டுப் பெண், வேட்பாளரின் 06▶

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு

பெயரே சும்மா மிரட்டுதில்ல...!

யாழ்ப்பாணம், ஜன.12

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயருக்கு தடை விதித் திருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி உள்ளன. ஆனால் தேர்தல் ஆணையாளர் இது தொடர்பில் எமக்கு கடிதம் மூலம் உத்தி யோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பி லேயே இதை குறிப்பிட்டார்.

அங்கு, அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தமிழரசுக் கட்சியின் செயலாளர் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப் 06▶

வண்ண வண்ணத் தலைமுடி

இளைஞர் எண்ணுகிறார் கம்பி

யாழ்ப்பாணம், ஜன. 12

தலைமுடிக்குப் பல வண்ணங்கள் பூசி வித்தியாச மான அலங்காரத்துடன் நீதிமன்றில் முன்னிலை யான இளைஞருக்கு மூன்று மாத சிறைத் தண்டனை விதித்தது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று.

நீதிமன்றை அவமதிப்பு செய்தார் என்ற குற்றத் தின் கீழேயே அவருக்கு இத்தண்டனையை வழங்கி னார் நீதிவான் ஏ.எம்.எம்.றியாடல். தண்டனை பெற்ற இளைஞருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதி மன்றில் வழக்கு இடம்பெற்று வருகிறது. அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்த நிலையில் 'வழக்குத் தவணைக்காக நேற்று நீதிமன்றுக்கு சமுகம ளித்திருந்தார். 06▶

80 சதவீத காணிகள் வடக்கில் விடுவிப்பு

மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

"நல்லாட்சி அரசின் கடந்த மூன்றாண்டு ஆட்சிக் காலத் தில் வடக்கில் இராணுவத் தின் வசமிருந்த காணிக ளில் 80 சதவீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு பற்றியும் கவ னம் செலுத்த வேண்டி யிருக்கின்றது"

- இவ்வாறு 06▶

பல்கலை. மாணவர்கள்

மோதலில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ் பல்கலைக்கழக மாண வர்கள் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது. இதில் காயமடைந்த நால்வர் யாழ். போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர்.

கலைப்பீடத்தின் 4 ஆம், 3 ஆம் வருட மாணவர்களுக்கு இடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றது. இந்த மோத லால் பல்கலைக்கழக சூழ லில் பதற்றம் ஏற்பட்டது.

இந்த மோதலில் காய மடைந்த மாணவர்கள் நால் வர் யாழ். போதனா வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். எனினும் அங்கிருந்து இருவர் தப்பிச் சென்றுவிட்டனர்.

பத்மநாதன் விஷ்ணு கீர்த்தன் மற்றும் கேதீஸ்வரன் கிருஷாந்தன் ஆகியோரே தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மோதல் குறித்து விசாரணைகள் ஆரம் பமாகியுள்ளன. (ச)

ஜனாதிபதி பதவியில் 6 வருடங்கள் நீடிக்கலாம்

சட்டமா அதிபர் அறிவிப்பு

அரசியலமைப்பின் 19 ஆவது திருத் தச் சட்டம் 2015 ஜனவரி 9 ஆம் திகதியே கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்னரே ஜனாதிபதி 6 ஆண்டுகளுக்காகப் பதவி யேற்றார். இதனால் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்ற வரை யறை பொருந்தாது, அவர் 6 ஆண்டுகள் பதவியில் இருப்பார் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 19ஆவது திருத் தச் சட்டம் கடந்த காலத்திற் 06▶

ஆரம்பமே பரீட்சையா...? அறிவிலித்தனமான செயல்

தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன.12

புதிய கல்வியாண்டு ஆரம் பித்த உடனேயே பரீட்சை களை நடத்தும் மாகாணக் கல்வித் திணைக்களத்தை வன் மையாகக் கண்டிக்கிறோம் என இலங்கைத் தமிழர் ஆசி ரியர் சங்கம் அறிக்கை வெளி யிட்டுள்ளது.

சங்கத்தின் நிர்வாக செய லர் கே.நல்லதம்பி அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

" பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்காக ஜன வரி 2ஆம் திகதி ஆரம்பமானது. 06▶

சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை: வழக்கு ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

சிறுப்பிட்டி இளைஞர்கள் இருவர் படு கொலை செய்யப்பட்ட வழக்கு விசார ணையை எதிர்வரும் ஏப்ரல் 12ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி 06▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெயிகொம்.

கேபிள்கள் துண்டிப்பு விசமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜன.12

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் பதிவு செய்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஏ.எஸ்.கே கேபிள் விசன் நிறுவனத்தின் கேபிள் இணைப்புகள் நாவற்குழி பகுதியில் நேற்றுமுன் தினமிரவு விசமிகளால் வெட்டித் துண்டாடப் பட்டுள்ளன. இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் வடமாகாணத்தில் சட்ட விரோதமாக இயங்கும் கேபிள் வழங்குநர்கள் தமது செயற்பாட்டை நிறுத்துமாறும், தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கில் கேபிள் இணைப்புகளை வழங்குவதற்கு தொலைத்தொடர்பு ஆணைக்குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள ஏ.எஸ்.கே கேபிள் விசன் நிறுவனத்தின் கேபிள் இணைப்புகள் நாவற்குழி பகுதியில் விசமிகளால் வெட்டித் துண்டாடப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் கடந்த மாதம் நடுப்பகுதியிலும் ஏ.எஸ்.கே கேபிள் நிறுவனத்தினரின் கேபிள் இணைப்புக்கள் பல்வேறு இடங்களில் வெட்டித் துண்டாடப் பட்டிருந்தன. இது தொடர்பில் கொடிகாமம், சாவகச்சேரி, மானிப்பாய் ஆகிய பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

தேர்தல் கூட்டங்களுக்காக சந்தையில் இடம் கொடாதீர்

வர்த்தகர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.12

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பொதுக் கூட்டங்களுக்கு கிளிநொச்சியின் பொதுச் சந்தையின் உட்புறத்தை பயன்படுத்த அரசியல் கட்சிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டாம்" என சந்தையின் பெரும்பாலான வர்த்தகர்கள் ஒப்பமிட்டு கரைச்சி பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

"எமது சந்தையின் உட்புறத்தில் உள்ளூராட்சித் தேர்தலையொட்டி பொதுக் கூட்டம் நடத்துவதற்கு அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். கடந்த காலத்தில் சந்தை வளாகத்துக்குள் அரசியல் கட்சிகளினால் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி கோரிய போது தாங்கள் எமது சந்தை வர்த்தகர்களினதும் அவர்களது சொத்துகளினதும் பாதுகாப்பு மற்றும், பொது மக்களின் நலன் கருதியும் அனுமதி வழங்காது இருந்தீர்கள். இது எமது வர்த்தகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் தற்போது தாங்கள் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டங்களுக்கு சந்தையின் உட்புறத்தை பயன்படுத்த அனுமதி வழங்கியிருப்பதாக அறிகின்றோம்.

சந்தையில் பல தரப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளை கொண்டவர்களின் வியாபார ஸ்தாபனங்கள் காணப்படுவதனால் ஒரு சில கட்சி சார்ந்த கூட்டங்கள் இடம்பெறுகின்ற போது வியாபாரிகளுக்கு பாதுகாப்பின்மை உருவாவதோடு, பல்வேறு அளெகரியங்களும் ஏற்படலாம். எனவே வர்த்தகர்களின் நலன் கருதி, அரசியல் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு சந்தையின் உட்புறத்தில் அனுமதி வழங்குவதனை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் " என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதி இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய, மாவட்ட அரச அதிபர், சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அமல் ராஜ், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

யாழ். செயலகத்தில் உறுதியுரை

யாழ்ப்பாணம், ஜன.12

நாடு முழுவதும் முன னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்களின் உறுதியுரை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சால் ஜனவரி 8 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதிவரை தேசிய நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனடிப்படையில் "நாட்டின் பல்வகைமைத் தன்மையை ஏற்று இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒருமித்து வாழக்கூடிய சூழலை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் உறுதியுரை எடுத்துக்கொண்டனர்.

யாழ், மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். (அ)

கொள்ளைக்கார கோடீஸ்வரர்

நகைகளோடு பிடிபட்டார்

கொழும்பு, ஜன.12

அனுராதபுரம் நகரில் உள்ள பிரதான தனியார் நிதி நிறுவனத்தில் சுமார் 7 கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக நொச்சியாகம பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல கோடீஸ்வர வர்த்தகரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

அனுராதபுரத்தில் உள்ள நிதி நிறுவனத்தில் இருந்து கொள்ளையிட்டதாகக் கூறப்படும் 11 கிலோ கிராம் தங்க ஆபரணங்கள் சந்தேகநபரிடம் இருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதனையும் பறிமுதல் செய்துள்ளனர்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் அனுராதபுரத்தில் உள்ள நிதி நிறுவனத்தில் 7 கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டிருந்தன. இதனிடையே திருப்பனை பிரதேசத்தில் சில மாதங்களுக்கு முன்னர் சிப்பாய் ஒருவர் உட்பட மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்தும் சந்தேக நபரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள பிரபல வர்த்தகர் கடந்த காலத்தில் பல முக்கிய அரசியல்வாதிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தவர் எனக் கூறப்படுகிறது. அவர் ஆயுதக்குழுவொன்றை இயக்கி, அதன் மூலம் இவ்வாறான கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

பொருந்தா இடங்களில் வீதி மின்விளக்குகள்

கிளிநொச்சி, ஜன.12

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினால் அக்கராயன் பிரதேசத்தில் பொருத்தப்பட்டு வரும் சூரிய சக்தி வீதி மின் விளக்குகள், பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டு வருவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் பிரதேசத்தில் நேற்று புதன் கிழமை முதல் பல இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவை பொது அமைப்புகளினால் ஏற்கனவே எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு மாறாக, சில தனிப்பட்ட நபர்களின் செல்வாக்கின் அடிப்படையில் பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன எனவும், இதனால் பொது மக்களுக்கோ, பொதுப் பயன்பாட்டுக்கோ அதிகளவு நன்மைகள் ஏற்படப் போவதில்லை எனவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பிரதேச பொது அமைப்புகள் வழங்கியுள்ள முன்மொழிவுகளுக்கு அமைய வீதி விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கரைச்சிப் பிரதேச சபையிடம் மக்கள் கோரியுள்ளனர். (அ)

விபத்தில் இறந்தவர்களின் இறுதிக்கிரியை

வடமராட்சி, ஜன.12

கடந்த செவ்வாய்க்கிழமை , கொக்காவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த நான்கு இளைஞர்களினதும் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. இவர்கள் நாள் வரும் மாலிசந்தி மைக்கல் விளையாட்டு கழக உறுப்பினர்கள் ஆவர். அதனால் அவர்களின் உடல்கள், மைக்கல் விளையாட்டு மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திய பின்னர், அவர்களின் உடல்கள் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டன. (அ- 11)

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 12 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

இதற்கு மட்டும் குறைவில்லை

நல்லாட்சி அரசாங்கம், தன் 'குடி' மக்களை எவ்வளவு தூரம் திருப்திப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு கீழிறங்கி, தன் சேவையை வழங்க முடிவு செய்திருக்கிறது.

நல்லாட்சி அரசு பதவியில் அமர்ந்தவுடன், புகைப் பொருட்களுக்கும், மதுபானங்களுக்கும் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டது. "இவ்வாறு விலையேற்றம் செய்தால் சாதாரண மக்களுக்குப் பாதிப்பில்லை. ஆனால் ஒரு சிகரட்டை வாங்க முன்னரை விடவும் அதிக பணம் செலவிட வேண்டியிருப்பதால், ஒரேயடியாகப் புகைத்தலைக் கைவிடா விட்டாலும், நாளொன்றுக்குப் புகைக்கப்படும் சிகரட்டுக்களின் எண்ணிக்கையாவது குறையும்" என அந்த விலையுயர்வுக்கு காரணமும் சொல்லப்பட்டது. ஒருவகையில் அது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணம் தான். நாளாந்த வருமானத்தின் பெரும்பகுதியை புகைத்தலுக்குச் செலவிட வேண்டி இருப்பதால், நாளடைவில் அந்தப் பழக்கத்தை பலரும் கைவிட வாய்ப்பிருந்தது.

ஆனால் மதுபானம், புகைப் பொருட்கள் என்பவற்றின் விலையை உயர்த்தினால் அவற்றின் பயன்பாடு குறையும் என்று சொன்ன அதே நல்லாட்சி அரசுதான், இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில், பியர் வகைகளுக்கும், மதுபானங்களுக்கும் விலையைக் கணிசமானளவுக்கு குறைத்தது. அதற்குச் சொல்லப்பட்ட காரணம், இன்னும் விநோதமானது.

"இளைஞர்கள் சீனித்தன்மை கொண்ட சோடாவைக் குடிக்காமல், பியரைக் குடிப்பதால் அவர்களின் ஆரோக்கியம் கெடாது. எனவே தான் சோடாவை விடவும் மலிவாக பியர் கிடைக்கும் வகையில் விலைக்குறைப்புச் செய்கிறோம்" என நிதியமைச்சர் மங்கள சமரவீர ஒரு போடு போட்டார். இந்த விலைக் குறைப்போடு பியர் வகைகளின் விற்பனை பலமடங்காக அதிகரித்திருப்பதாகப் புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. இந்த விலைக்குறைப்பால் அரசுக்கு ஒரு வகையில் நஷ்டம் ஏற்படுவது போல இருந்தாலும் , இன்னொரு வகையில் முன்னரை விடவும் அதிக இலாபமே கிடைத்துள்ளது. அதாவது பியர் விற்பனை சூடு பிடித்துள்ளதால், 'சிறிய லாபம், அதிக விற்பனை' என்ற சூத்திரத்தில் அரசின் காட்டில் மழைதான்.

இப்படி மதுபான விற்பனையால் அதிக வருவாயைப் பெறும் வழியைக் கண்டுபிடித்த நல்லாட்சி அரசு, இன்னும் என்னென்ன வழிகளில் அந்த விற்பனையை உயர்த்தலாம் என 'ரூம்' போட்டு யோசிக்கிறது. அந்த யோசனைகளின் விளைவாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டங்களையும், சட்டங்களையும் அரசு அறிவிக்கத் தொடங்கியிருக்கிறது.

மதுவிற்பனை நிலையங்களில் பெண்களை வேலைக்கு அமர்த்தினால் கூட்டம் அலைமோதும் என்பதால், இதுவரை மதுவிற்பனையில் பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்றுமுன்தினம் முதல் நீக்கப்பட்டுவிட்டது. அந்த அறிவிப்பு வந்த சூடு ஆறுவதற்கிடையில் இன்னொரு அறிவிப்பும் வந்து , 'குடிமக்களை' குஷிப்படுத்தியிருக்கிறது.

மதுபான விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும் நேரத்தை நீட்டித்துள்ளது நல்லாட்சி அரசு. இதனால் சாமம் வரைக்கும் மதுபான நிலையங்களில் வியாபாரம் தூள் பறக்கப் போகின்றது.

பணத்தைச் சம்பாதிக்கும் வழிகளை மட்டுமே முன்னிறுத்தி நல்லாட்சி அரசின் நடவடிக்கைகள் நகர்கின்றன. இதே வழியில் சென்றால், இன்னும் சில நாட்களில் மதுபான நிலையங்களில் பாலியல் தொழில் செய்வதற்கான அனுமதியையும் இந்த அரசு வழங்கிவிடக்கூடும். வாழ்க நல்லாட்சி, வளர்க 'குடிமக்கள்'!

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

பரபரப்பைக் கிளப்பும் சந்திப்பு ஜனாதிபதி - ரவி கருணாநாயக்க

கொழும்பு, ஜன. 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை வெளிவந்துள்ள சூழ்நிலையில், இந்த விவகாரத்தில் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்படும் ரவி கருணாநாயக்க ஜனாதிபதியை சந்தித்தமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை அடுத்தகட்ட நடவடிக்கைக்காக சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கிடையாது என்ற நிலைப்பாட்டிலிருந்த நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்.

எனவே, உரியவகையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், குற்றச்சாட்டுக்குள்ளாகி பதவி துறந்துள்ளவர்களுக்கு மீண்டும் பதவிகளை வழங்குவதிலும் கருணை காட்டப்படாது என்று ஜனாதிபதி இதன்போது திட்டவட்டமாக அறிவித்துள்ளார் என அறியமுடிகின்றது. இந்தச் சந்திப்பில் பிணை முறிமோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை நிராகரித்துள்ள ரவி கருணாநாயக்க, தம் மீது போலிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

அனுமதிக்காத இடத்தில் மணல் அகழ்ந்த நால்வர் கைதாகினர்

முல்லைத்தீவு, ஜன. 12

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய நான்கு பேரை விசேட அதிரடிப் படையினர் நேற்றுக் கைது செய்தனர்.

முல்லைத்தீவு மருதன்குளம் ஆற்றில் மணல் அகழ அனுமதிக்கப்படாத இதனை பகுதியில் மணல் அகழ்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அத்துடன் மணல் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட நான்கு ட்ரக்டர்களையும் அதிரடிப் படையினர் கைப்பற்றினர்.

கைதானவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த மல்லாவிப் பொலிஸார் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். (ச)

5 எம்.பிக்கள் 'அவுட்?'

கொழும்பு, ஜன.12

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய முயற்சி நடப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

" கூட்டு எதிர்க்கட்சிக்குள் செயற்பாட்டு ரீதியாக இயங்கி வரும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையே இவ்வாறு இரத்து செய்யப்பட உள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமைகளும் இரத்து செய்யப்படும் என்ற செய்தியை வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சொல்ல நினைக்கிறது. கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்படுவதால், பொதுஜன முன்னணிக்கு வாக்களித்து எந்த பயனும் இல்லை என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்துவதே இதன் நோக்கம். ஆனால் அதில் சுதந்திரக் கட்சி வெல்லமுடியாது" என வும் கெஹெலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார். (அ)

யாழ். இந்துவின் பொங்கல் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் தினமான வரும் ஞாயிற்றுக்கிழமை பொங்கல் திருவிழா இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சதா நிமலனின் தலைமையில் காலை 11 மணி முதல் பொங்கல் நிகழ்வுகளுடன் கூடிய கலாசார, சுதேசிய விளையாட்டுக்களை உள்ளடக்கிய நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன என்று பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

"காலை 11.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து சிலம்பாட்டம், பொய்க் கால் குதிரை ஆட்டம், மாட்டு வண்டி பவனி ஆகிய பாரம்பரிய அம்சங்களுடன் கூடிய கலாசார நடை பவனி யாழ். நகரை வலம்வரும். தொடர்ந்து கபடி, கிளிதட்டு, சறுக்கு மரம் ஏறுதல் ஆகிய பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

தமிழர் தலை நிமிர் கழகத்தின் பொங்கல் திருவிழாவில் இணைந்து எமது பாரம்பரியங்களையும் கலாசார அம்சங்களினுடனும் இணைந்து தமிழர் திருநாளைக் கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்" என்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேலும் தெவித்துள்ளது. (ச)

ஏழரைக் கோடி ரூபா மோசடி விமல் வீரவன்ஸவுக்கு பிணை

கொழும்பு, ஜன. 12

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று பிணையில் விடுவித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, மகிந்த தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சராகவிருந்தபோது சட்டவிரோதமாக ஏழரைக் கோடி ரூபா பணத்தை வருவாயாகப் பெற்றார் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குற்றஞ்சாட்டியது.

அது தொடர்பான குற்றப் பத்திரிகையை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆணைக்குழு தாக்கல் செய்த்து.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மன்றில் முன்னிலையானார். அவருக்கு குற்றப் பத்தரிகை வாசித்துக் காண்பிக்கப்பட்டது. இந்த குற்றச்சாட்டுக்களில் தான் நிரபராதி என விமல் வீரவன்ஸ மன்றிடம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியிலான 2 ஆள் பிணையில் விடுவித்தது. வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)

பேரவை ஏற்பாட்டில் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கருத்தமர்வும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடக்கும் இந்நிகழ்வுக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார்.

இதில், "வடக்கு, கிழக்கு தமிழர் தம் உரிமைகளின் கேடயமாக சர்வதேச சட்டம்" என்ற தலைப்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் முத்துக்குமாரசாமி சொர்ணராஜா, "இடைக்கால அறிக்கை - மாயைகளை கட்டுடைத்தல்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக சட்டத்துறை தரைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான இ.குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் கருத்துகளை வழங்குவர். (ச)

இன்று நாளும் கோளும்

12.01.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 28 ஆம் நாள்

திதி பகல் 01.35 மணி வரை	விசாகம் 11.01 வரை	சித்தயோகம்
இராகுகாலம் 10.30 - 12.00	எமகண்டம் மு.ப. 09.30 - 10.30	எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்
அலைச்சல்	அசதி	ஆர்வம்	கோபம்	பரிவு	பக்தி	நன்மை	வெற்றி	தடங்கல்	பகை	பரிசு	பிரீதி

மறியலில் உள்ளோரின் பெற்றோருக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ். மாவட்டத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெற்றோருக்கு அறிவுரை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜித குணரட்ண தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள், கொள்ளைச் சம்பவங்கள் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோருக்கு இதன்போது, அறிவுரைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம் ஆகிய பிரதேசங்களில் கைதுசெய்யப்பட்டு சிறையில் உள்ளவர்களின் பெற்றோர், யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

கொழும்பு-கண்டி அதிவேகப் பாதை 2020 இல் திறப்பு

கொழும்பு, ஜன.12

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் கொழும்பு-கண்டி அதிவேகப் பாதை திறந்து வைக்கப்படுமென உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கனேமுல்ல மேம்பாலத்தை மக்கள் பாவனைக்காக நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“ தற்போது கொழும்பு- கண்டி அதிவேகப் பாதையின் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் கடவத்தையிலிருந்து மீரிகம வரையான பகுதியை அமைக்கும் பணி சீன நிறுவனத்திடமும், மீரிகமயிலிருந்து குருநாகல் வரையான பகுதியை அமைக்கும் பணி தேசிய ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதில் மூன்றாவது பகுதி பொத்துஹெர விலிருந்து கலகெதர வரை ஜப்பான் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிவேகப் பாதையை 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்” என்று அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

பக்கச் சார்பாக நடந்த நீதிபதி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன.12

கிழக்கு மாகாணம் பொத்துவில் மாவட்ட நீதிபதி எம்.ஐ.வாகாப்டீன், அந்தப் பதவியிலிருந்து உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

குமண வனப்பகுதியில் முஸ்லிம்கள் சிலரால் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கை நடவடிக்கை தொடர்பான வழக்கில் நீதிபதி மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டையடுத்தே, நீதிச் சேவைகள் ஆணைக்குழு இந்தப் பணி இடைநிறுத்த உத்தரவை நேற்றுமுன்தினம் வழங்கியது.

பொத்துவில் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட குமண வனப் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் சட்டவிரோதமாகக் காடழிப்பை மேற்கொண்டு நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

முஸ்லிம்களின் இந்த அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிராக வனவளத் திணைக்களத்தால் பொத்துவில் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஏற்க மறுத்தனர். அதனால் அந்த வழக்கு நீதிமன்றால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் வீடியோப் பதிவொன்றை வெளியிட்ட செய்த சிங்கள இலத்திரனியல் ஊடகம் ஒன்று சட்டவிரோதக் காடழிப்புக்குத் துணை போகும் வகையில் நீதிமன்றமும் செயற்படுகின்றது என நீதிபதி மீது குற்றச்சாட்டை முன் வைத்தது.இது தொடர்பில் நீதிச் சேவைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்தது.

பின்னர் பொத்துவில் நீதிமன்ற நீதிவானும் மாவட்ட நீதிபதியுமான எம்.ஐ.வாகாப்டீன் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் மாவட்ட நீதிபதி வாகாப்டீன் நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் அந்தப் பணியிலிருந்து இடைநிறுத்தப் படுவதாக நீதிச்சேவை ஆணைக்குழு உத்தரவு வழங்கியது.

நீதிபதி எம். ஐ.வாகாப்டீன் கிளிநொச்சி மாவட்ட நீதிபதியாக 2016ஆம் ஆண்டு இறுதிவரை பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

‘குடி’ மக்களுக்கு கொண்டாட்டம்

கொழும்பு, ஜன.12

மதுபானசாலைகள் திறந்திருக்கும் நேரத்தில் நேற்று முதல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, வெளிநாட்டு மதுபான நிலையங்கள் காலை 11 மணியிலிந்து இரவு 10 மணிவரையும், சுற்றுலா அனுமதியுடனான மதுபான நிலையங்கள் அதிகாலை 2 மணிவரை திறந்திருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை சுற்றுலா அனுமதியுடனான மதுபான விற்பனை நிலையங்கள் இரவு 12 மணிவரை திறந்திருந்த நிலையில், இந்த நேரத்தை அதிகரிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே திறந்திருக்கும் நேரம் அதிகரிக்

கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சில்லறை மதுபான விற்பனை நிலையங்களை காலை 8 மணியிலிருந்து இரவு 10 மணிவரைக்கும் திறந்திருப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

இதற்கான வர்த்தமானியில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுக் கையெழுத்திட்டுள்ளார்.(அ)

மக்கள் சொந்தக் காலில் நிற்க தேர்தலைப் பயன்படுத்துங்கள்

டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.12

“மக்கள் சொந்தக் கால்களில் நின்று தமது வாழ்வியலை மேம்படுத்துவதற்கு, நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்” என ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற, யாழ். மாநகர சபை வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது மக்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்கோ அன்றி தமது பகுதிகளில் உள்ள வீதிகளைச் செப்பனிடுவதற்கோ இதர கட்டுமாணப் பணிகளையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்கோ மட்டும் வாக்களிக்கக் கூடாது. உள்ளூராட்சி சபைகளினூடாக பலாபலன்களை உரியமுறையில் முன்கொண்டு செல்பவர்களை இனங்கண்டு அவர்களை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதை முன்னிறுத்தியதாக எமது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அமைய வேண்டும்.

அத்துடன் யாழ்.மாநகர சபையை நாம் ஆளுகை செய்த போது நகரின் சுத்தம் சுகர்தாரத்தை பேணிப்பாதுகாத்ததுடன், தமிழ் மன்னர்களுக்கும் தமிழ் மக்களைப் பாதுகாத்த பெருந்தகையாளர்களுக்கும் சிலைகளையும் அமைத்திருந்தோம். குறிப்பாக மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளைக் கொண்டு அபிவிருத்திகளை முன்னெடுத்தது மட்டுமன்றி அரசிடமிருந்து விசேட நிதிகளைப் பெற்றும் பல்வேறு அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்திருந்தோம்.

எமது பணிகளை தொடர்ந்தும் மக்களுக்கு செய்வதற்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் எமது வீணைச் சின்னத்துக்கு ஆணையை வழங்குவார்களேயானால் அவர்களுடைய தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களது எண்ணக் கனவுகளை ஈடேற்ற நாம் உழைப்போம் “ என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (அ)



மகிந்தா “ஹொறா” ரணில் “ஹொறா”

நான் பாத்ததிலை வடிவேலுவின்ரை பகிடி கூட உப்பிடி இல்லை. அவ்வளவு நகைச் சுவையாக் கிடந்திது. முதலி தான் தன்ரை கான்போனிலை அதைக் காட்டினவன். வீடியோ எண்டபடியால் காசு போவிடு மெண்டு ஒருக்காத் தான் காட்டினவன். திருப்பி ஒருக்கா ஓட விடடா பாப்பம் எண்டன். மாட்டன் எண்டிட்டான். எட அறுவானே காசைத் தாறன் காட்டடா எண்டன். இப்ப காட் வேண்டக் கடைக்குப் போக வேணும். அதோடை ரெலிபோனிலை காட்டைப் போட மனுசிக்குத்தான் தெரியும், எண்டிட்டான். உது வில்லங்கம் அண்ணை கேளாதை எண்டு சொல்லிப் போட்டான்.

ஆனால் பாத்ததுவரைக்கும் சொல்லுறன் கேளுங் கோவன். பாளிமெண்டிலை ரணில் கதைக்க வெளிக்கிட மகிந்த பார்ட்டி எழும்பி “ரணில் ஹொறா” அப்பிடி எண்டால் ரணில் கள்ளன் எண்டு கத்தக் கத்த ஒரே பாளிமெண்டிலை அமளி துமளியாப் போச்சுது. பாத்தால் சந்திசண்டை மாதிரி எழும்பி நிண்டு தள்ளுப்பட்டு ஒரே சீத்துவக்கேடு. அதுக்கு ரணிலும் விடேல்லை. அவர் “மகிந்த ஹொறா” மகிந்தா கள்ளன், மகிந்தா கள்ளன் எண்டு கத்த , அந்தக் கதையை ஒரு சினிமாப்படமா எடுக்கலாம். எடுத்தால் நல்லா ஓடும்.

இரண்டு பக்கமும் கள்ள நாயள்தான் இருக்குதுகள். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு எப்ப பதவிக்கு வருவம் எண்டு பாத்துக் கொண்டு நிண்டு வந்த உடனை காசடிக்கிற யோசினையும், கள்ளக் காசு சேர்க்கிற யோசினையும் தான். சனத்தின்ரை காசை எடுத்து நல்லா வரலாம் எண்டு உவையின்ரை யோசினை. கடைசியா கட்டி எண்டும், கான்சர் எண்டும் டேடனுக்கும், நவலோகாவுக்கும் காசை லட்சம் லட்சமாக் கிறடிட் காட்டாலை இழுக்கேக்கைதான் தெரியும்.

இஞ்சை மட்டுமில்லை. உலகத்திலை எங்கும். அரசியலுக்கை வாறதுகள் எல்லாம் சொத்துச் சேர்க்கவும், அரசாங்கக் காசிலை சுகம் அனுபவிக்கிறதுக்காகவும் எண்டது தானே எல்லாற்றை யோசினையாவும் கிடக்கு.

ஏன் அங்கை இஞ்சை போவான்? எங்கடை வட மாகாண அரசாங்கத்திலையே ஆக மானங்கெட்ட விசியம் என்னெண்டால் கமிஷன் வைச்சு அறிக்கை வாசிச்சு அமைச்சர் மாரைக் களவு செய்ததெண்டு நிப்பாட்டினதுதானே?. முதலமைச்சர் சொல்லுறார் அவை களவு செய்திராயினம் எண்டு. அவையும் சொல்லினம் தாங்கள் அப்பிடி ஒண்டும் செய்யேல்லை எண்டு. ஆனால் அறிக்கை சொல்லுது அவை குற்றவாளியள் எண்டு. எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை.

அப்பிடித்தான் ரணிலின்ரை விசியமும். அவையளும் தாங்கள் ஒண்டும் செய்யேல்லை நல்ல பிள்ளையள் எண்டு கையைத் தூக்கிக் காட்டினம். பாக்க வெள்ளையாத்தான் கிடக்கு. சந்திரிகாவும் சொல்லுறா ரணில் நல்ல மனுசன். அவர் பரம்பரைப் பணக்காரன். அவரிட்டை கோடி கோடியாக் கிடக்கு அந்தாள் ஏன் உப்பிடிச் சிக்கல் படுத்தப்போகிது எண்டு. சந்திரிகா சொல்லறதை ஞாயம் எண்டு கண்டால், ரணிலைச் சுத்திக் கனக்க நிக்கிதெல்லே? அவையளை என்ன ஆஸ்பத்திரியிலை கொண்டு போய் எக்ஸ்ரேப் படம் எடுத்தே பாக்கிறது? உள்ளுக்கை வெள்ளையோ கறுப்போ எண்டு. அதுகள் அடிச்சிருக்கும்?

பொதுவாச் சொல்லுறன் சனத்தின்ரை காசிலை குளிர் காயிறவை ஒரு நாளும் உருப்படாயினம். நான் அரசியல் வாதியளை மட்டும் சொல்லேல்லை. எல்லாரையும் தான். இப்ப பாத்தால் அடிச்சுப் பிடிச்சு அரசாங்க உத்தியோகம் எண்டு வாறது. வந்தாப் பிறகு அதுக்கை போய் இருந்து கொண்டு எப்பிடி வேலை செய்யாமல் நேரத்தைப் போக்கிறதுக்கும் படிக்கினம். அதோடை எப்பிடி சும்மா இருந்து கொண்டு சம்பளத்தை வாங்கிறதுக்கும் படிக்கினம். அரசாங்கத்திட்டைச் சம்பளம் வாங்கிக் கொண்டு அந்த நேரத்திலைதான் தங்கடை சொந்த வேலையளும், பிள்ளையளை வகுப்புக்கு இறக்கி ஏத்திறதும் எண்டு... அப்ப அரசியல்வாதியும் உவையும் ஒண்டுதானே. மொத்தத்திலை உவையின்ரை சீவியமும் நுளம்பின்ரை சீவியமும் ஒண்டு தானே? சும்மா இருந்து கொண்டு ஆற்றையேன் இரத்தத்தைக் குடிக்கிறது. நுளம்பு குடிக்கிற இரத்தத்தாலை டெங்கும், மலேரியாவும் மற்றவையளுக்குத்தான் வரும். ஆனால் உவை குடிக்கிற இரத்தத்தாலை உவைக்குத்தான் எல்லாம் வரும். எல்லாம் வில்லங்கந்தான். வரட்டே?

- வில்லங்கம் விநாசி

கணக்காளர் பரீட்சையில் தமிழர்களுக்கு அநீதி

கொதிக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஜன.12

"தமிழ்ப் பரீட்சார்த்திகள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர் என்பதற்காக பரீட்சை பெறுபேற்றை வெளியிடாது பரீட்சையையே இடைநிறுத்துவதென்பது நல்லாட்சி அரசு என்று சொல்பவர்களின் மிக மோசமான இனவாத சிந்தனையின் வெளிப்பாடே" என்று ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கணக்காளர் பரீட்சை தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக் கணக்காளர் தரம் 3 இற்கான பரீட்சை 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு பரீட்சை நடத்தப்பட்டது. இந்தப் பிரீட்சையின் பெறுபேறுகள் 2017 ஆம் ஆண்டு வருட இறுதியில் வெளியாகி அதற்கான நியமனங்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால் இந்தப் பரீட்சைக்கான முடிவுகளை வெளியிடாமலே பரீட்சை முற்று முழுதாக இடைநிறுத்தப்படுவதாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த இடைநிறுத்தம் ஏன் என்பது குறித்து காரணம் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் நாங்கள் அறிந்த வரையில் இலங்கை முழுவதும் நடந்த இந்தப் பரீட்சையில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அதிகளவான புள்ளிகளைப் பெற்றிருப்பதன் காரணமாகவே அது இடை நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பொழுது மீண்டும் அந்தப் பரீட்சைக்கான அறிவித்தல் வந்திருக்கிறது. அதுவும் பரீட்சைக்கான நேர காலங்கள் கொடுக்காது அல்லது எந்தவித முன் அறிவிப்போ தயார்ப்படுத்தலோ இல்லாது பரீட்சையென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'இதனால் ஏறத்தாழ 70 க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் இன்றுவரை எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அரசாங்கத்துடனோ அல்லது நாடாளுமன்றத்திலோ இது குறித்துப் பேசவில்லை. ஆகவே முதலில் நடைபெற்ற பரீட்சை முடிவுகள் வெளிவர வேண்டும் அல்லது அந்தப் பரீட்சை முடிவுகள் ஏன் இடைநிறுத்தப்பட்டன என்பது வெளிப்படுத்த வேண்டும்.

இது மிகத் திட்டமிட்ட செயற்பாடாகவும் தமிழ் பரீட்சார்த்திகளின் உரிமையை மறுதலிப்பதான விடயமாகவே கருதுகிறோம். ஆகவே இந்த சந்தர்ப்பத்திலாவது அரசுடன் பேசி சரியான வழிமுறையில் நீதிநியாயத்தை பெற்றுக் கொடுக்க எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும்" என்று அவர் தெரிவித்தார். (அ)

அந்தநாள் ஞாபகம்



12.01.1983

பிரித்தானியத் திரைப்படமான 'காந்தி' எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றது.

உறவில் விரிசல் இல்லை

கொழும்பு, ஜன.12

இலங்கைத் தேயிலைக்கு தற்காலிகமாகத் தடை விதித்தமை ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவில் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று இலங்கையில் உள்ள ரஷ்யத் தூதுவர் யுரி மெற்றரி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தூதுவருக்கும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

"இலங்கையுடனான நல்லுறவை வலுப்படுத்த நாம் விரும்புகின்றோம். இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் தற்போது குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. பாரம்பரியத் தயாரிப்புத்துறையில் உள்ள வர்த்தக நடவடிக்கையை விரிவுபடுத்த வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் மொஸ்கோவில் இந்த வருடத்தில் நடைபெறுவுள்ள ரஷ்ய - இலங்கை ஆணைக்குழு கூட்டத்தில் இலங்கை கலந்து கொள்ளும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதனைத் தொடர்ந்து பெரியளவிலான வர்த்தக நடவடிக்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்படும். இலங்கையின் அபிவிருத்தி தொடர்பில் எரிசக்தி மற்றும் விவசாயத்துறையின் மேம்பாட்டுக்காக ரஷ்யா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்" என்றும் தூதுவர் சுட்டிக் காட்டினார். (அ)

கப்பலுடன் மோதிய படகு இரு மீனவர்கள் மரணம்

கொழும்பு, ஜன.12

தெய்வேந்திரமுனைக் கடற்பரப்பில் வாகனங்களை ஏற்றிச்செல்லும் கப்பல் ஒன்றுடன் மீன்பிடிப் படகொன்று மோதியதில், படகில் இருந்த மீனவர்கள் இருவர் பலியாகியுள்ளனர். இன்னும் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

ஏழு மீனவர்களுடன் ஹிக்கடுவ மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இம்மாதம் முதலாம் திகதி புறப்பட்டுச் சென்ற 'நதீஷா ' என்ற மீன்பிடிப்படகு, கொழும்புத் துறைமுகத்திலிருந்து அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நோக்கிப் பயணித்துகொண்டிருந்த 'எம்விக்லோவிஸ் கப்டன்' எனும் வாகனங்களை ஏற்றிச் செல்லும் கப்பலுடன் மோதியே விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான மீனவர்களை மீட்கும் நடவடிக்கையில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்களில் இருவர் கப்பலின் சிப்பாய்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரின் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைளின்போது மேலும் ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளனர். பலியான இருவரின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னொருவர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதேவேளை-குறித்த விபத்தில் உயிரிழந்த மீனவர்கள் இருவரினதும் குடும்பங்களுக்கும் தலா 10 இலட்சம் ரூபா நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுகம்

இன்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜன.12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் அறிமுகமும் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடும் யாழ். நகரிலுள்ள 'பிள்ளையார் இன்' விடுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது வேட்பாளர்களை அறிமுகமும் செய்து தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகமும் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

சாரதி 'கொர்..கொர்!' ஓட்டோ குத்துக்கரணம்

ஹட்டன், ஜன.12

ஹட்டனில் முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி, குடைசாய்ந்தில் சாரதி சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

குறித்த முச்சக்கர வண்டி நேற்றுக் காலை 7 மணியளவில் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் உள்ள, மல்லியப்பு சுற்றுவட்டத்துக்கு அருகிலேயே இவ்வாறு வீதியை விட்டு விலகித் தடம்புரண்டது. முச்சக்கரவண்டிச் சாரதிக்கு தூக்க கலக்கம்ஏற்பட்டதன் காரணமாக இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

பெயருக்கு மாத்திரமே பெண்கள்

குற்றம் சாட்டுகிறது கபே

வவுனியா,ஜன.12

"வட மாகாணத்தில் பல இடங்களில் பெயரளவில் மாத்திரமே பெண்களின் பெயர்கள் வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெண்களுக்கு அரசியலில் முக்கிய பங்கு கொடுக்க வேண்டும் என உள்ளார்த்தமாக எந்தக் கட்சியும் பெண்களை வேட்பு மனுவில் உள்ளடக்கவில்லை" என கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அகமட் மனாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் வாக்கெடுப்பு சட்ட திருத்தங்கள் மற்றும் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பில் வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வட மாகாணத்தில் பல இடங்களில் பெயரளவில் மாத்திரம் பெண்களின் பெயர்கள் வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவர்கள் வட்டார ரீதியில் வெற்றி பெற்றாலும் சரி, பெறாவிட்டாலும் சரி என்ற மனோபாவத்துடனேயே தேர்தல் பிரசார வேலைத் திட்டத்தை ஆண்கள் முன்னெடுத்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

வட்டார ரீதியில் பெண்கள் தெரிவு செய்யப்படாமல் கட்சி ரீதியாகவும், சுயேச்சைக் குழுக்களிலும் ஆண்கள் மாத்திரம் வெற்றிபெற்றால் மேலதிகப் பெயர்ப்பட்டியலில் இருந்து பெண்களின் பெயர்களை மாத்திரமே தெரிவு செய்து அனுப்ப வேண்டிய இக்கட்டான நிலை கட்சியின் செயலாளர்களுக்கு ஏற்படும்.

எனவே கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள், பெண்கள் போட்டியிடும் வட்டாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தி அவர்கள் வெற்றி பெறுவதற்கான ஆலோசனைகளையும் அவதானத்தினையும் வழங்க வேண்டும்.

இதேவேளை சில அபேட்சகர்களும் கட்சிகளும் இனரீதியிலான பிரசாரங்களை முன்னெடுப்பதனை அவதானிக்க முடிகின்றது. சில கட்சிகளின் பெயர்கள் இனத்தினை அடையாளப்படுத்தும் பெயர்களில் காணப்பட்டாலும் அவர்கள் குறிப்பாக அந்த இனத்துக்குத்தான் வாக்குகளை வழங்க வேண்டும் வேறு இனத்தவர்கள் பிரசாரங்களில் ஈடுபட முடியாது என்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். ஆகவே இன ரீதியாகவோ பிரதேசவாத்தைத் தூண்டும் வகையிலோ பிரசாரங்களில் ஈடுபடுவதை கபே அமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

கொக்கெய்ன் அழிப்பு

கொழும்பு, ஜன.12

பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 900 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப்பொருளைக் கட்டுநாயக்கவில் வைத்து பகிரங்கமாக அழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி இவற்றை அழிக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (அ)

இலங்கையின் பெண்களுக்கு இனி ஜப்பானிலும் வேலை

கொழும், ஜன. 12

இலங்கை - ஜப்பான் நாடுகள் செய்த புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் இலங்கை பெண்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கும் ஜப்பான் நிறுவனம் ஒன்றுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக, இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இதன்படி, பராமரிப்பு தொடர்பான பணியாளர்கள் 100 பேருக்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளதாகவும் இதற்காக ஒருவருக்கான மாத சம்பளம் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

ஜப்பான் மொழியில் தேர்ச்சி பெற்ற 18 க்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட யுவதிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் கூறப்பட்டுள்ளது. (மு)

இன்றைய கேலிச்சித்திரம்

பிணைமுறி அறிக்கை மத்திய வங்கியிடம்

கொழும்பு, ஜன. 12

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக, அந்த அறிக்கையின், பிரதி மத்திய வங்கியின் ஆளுனருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரினால் நேற்றுமுன்தினம் இந்த அறிக்கை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2008 முதல் 2014ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற திறைசேரி பிணைமுறி வழங்கல் சம்பந்தமாகவும், 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற பிணைமுறி வழங்கல் சம்பந்தமாகவும் விரிவான கணக்காய்வு செய்வதற்கு நிதிச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது. (ச)

தேர்தலில் போட்டியிட குற்றவாளிகளுக்கும் அனுமதி

கொழும்பு, ஜன. 12

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல்வேறு குற்றவாளிகள் மற்றும் பாலியல் வல்லுறவுச் சம்பங்களுடன் தொடர்புடைய பலர் போட்டியிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இம்முறை தேர்தல் தொடர்பில் 243 சம்பவங்கள் கிடைத்துள்ளதாகவும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலான 287 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் அதிகமான முறைப்பாடுகள் அரசியல் நோக்கங்களை கொண்ட விருந்துகள் மற்றும் சட்ட விரோத பிரசாரங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் ஆணைக் குழுவும் பொலிஸாரும் இந்த நிலைமையை குறைக்க மிகப் பெரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ச)

தொடர்ச்சிகள்

ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரிய சட்டம் அல்ல எனவும் அது எதிர் காலத்திற்கு பொருத்தக் கூடிய சட்டம் எனவும் சட்டமா அதிபர் கூறியுள்ளார். இதனால், எதிர்காலத்தில் ஜனாதிபதியாக பதவிக்கு வருபவர்களின் பதவிக் காலமே 5 ஆண்டுகளாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

6 வருடகாலம் ஜனாதிபதியாக பதவி வகிப்பதில், சட்ட பிரச்சினைகள் இருக்கின்றவா என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயர்நீதிமன்றத்திடம் சட்ட விளக்கம் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

சிறுப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் படுகொலையானோரின் பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டில் அடிப்படையில் 16 இராணுவத்தினரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்தனர். எனினும் 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் 16 இராணுவத்தினருக்கும் பிணை வழங்கியது.

இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று சட்டமா அதிபரால் 2016ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் போரில் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் ஏனைய 14 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
வழக்கிலிருந்து விடுவிக்க சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 9 இராணுவத்தினர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஏனைய 5 இராணுவத்தினருக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த வருடம் பிணை வழங்கியது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் 5 பேரும் மன்றில் முன்னிலையாகினர்.

"இந்த வழக்கை முன்னெடுப்பதற்கு மன்னார் மாவட்ட அரச சட்டவாதி சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டார். அவர் தற்போது கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். அதனால் வேறொரு அரச சட்டவாதியை விரைவில் நியமிப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது. எனவே வழக்கு விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்று அச்சுவேலி பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தையடுத்து வழக்கு விசாரணையை வரும் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ச)

ஆரம்பமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகள் புதிய வகுப்புகளில் நிலைகொள்ள முன்னரே பரீட்சையை நடத்துகின்றது வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம். அதுவும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு பரீட்சையை நடத்துவது அறிவிலித்தனமான செயற்பாடு. பரீட்சை என்றாலே எல்லோருக்கும் பதற்றம். அதிலும் குழந்தைகளுக்கு பரீட்சைகளை நடத்துவது உளவியல் ரீதியாக எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மாகாணக் கல்வித் திணைக்களம் அறியாதிருப்பது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெரும் அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இதுபோன்ற அறிவிலித்தனமான பல செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாக இருந்தால் பல விடயங்களை வெளிப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தயங்காது என எச்சரிப்பதோடு, மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளரின் துறைசார் திறமையையும் பரிசோதிக்கும் நிலை ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது.

ஏற்கனவே மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய பரீட்சைகளில் பல குறைபாடுகள் இருப்பதை பலரும் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் தாங்கள் நினைத்ததை நடத்துவோம். என மாகாணக் கல்வித் திணைக்களம் கங்கணம்கட்டி நிற்பது ஆபத்தானது என்பதனையும் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது. இந்த இடத்தில் ஆசிரியை ஒருவருக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட இடமாற்றம் நீதிமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டதும், இதுபோன்ற பல செயற்பாடுகள் சட்டத்திற்குப் புறம்பாக வடக்கு மாகாணத்தில் நடைபெறுவதும் புதிதான ஒன்றல்ல. இது பற்றி நாம் அவ்வப்போது சுட்டிக்காட்டினாலும் அவை திருத்தப்படுவதாக இல்லை. ஆனாலும் இவை தொடராமல் இருப்பதற்கும் தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கும் மாகாணக் கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

80 சத வீத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஒளிபரப்பான தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார அபிவிருத்தி முக்கியமானது. தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தை சீர்குலைக்காமல், பேச்சுகள் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வது முக்கியமானதாகும். அரசு நீதித்துறையின் நடுநிலையை பாதுகாப்பதால், சர்வதேச மனித உரிமை பேரவையின் நிலமையை சாதகமாக மாற்ற முடிந்துள்ளது.

சமகாலத்தில் தூய்மையான தேசிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பும் தேவை உள்ளது. இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சீரான ஒழுக்கத்துடன் கட்டுக் கோப்பாக செயற்படுகிறது. சிறந்த முன் உதாரணங்களுடன் நேர்மையான அரசியல்வாதிகள் உருவாவது அவசியம். எதிர்வரும் தேர்தல்களில் தூய்மையான அரசியல்வாதிகளை தமது பிரதிநிதிகளாக தேர்ந்தெடுப்பது வாக்காளர்களின் பொறுப்பாகும்.

ஜனாதிபதி என்ற ரீதியிலும், அரசியல் கட்சியின் தலைவர் என்ற ரீதியிலும் தேர்தல் சட்ட திட்டங்களையும், ஆலோசனைகளையும் முறையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளேன். நீதியான, நியாயமான தேர்தலை நடத்த வழிவகுப்பது இதன் நோக்கமாகும். நடப்பு ஆண்டில் பெருந்தொகை கடனை மீளச் செலுத்த வேண்டியிருக்கிறது. இது தொடர்பான சவால்களை சிறப்பாக சமாளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். முன்னைய காலங்களில் எழுந்த சில சவால்களை வெற்றி கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டது. பிரச்சினைகளின் பின்புலத்தில் அரசியல் சக்திகள் இயங்கியமை இதற்குக் காரணமாகும்.

சமகாலத்தில் நாட்டில் சுதந்திரமும், ஜனநாயகமும் நிலவுகிறது. இதன் காரணமாக எவரும் சுதந்திரமாக கருத்து வெளியிட முடியும். அரசு எப்போதும் இலவசக் கல்வியை வலுப்படுத்தும், தனியார் கல்விக்கும் பரந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஊழல் மோசடி விசாரணைகளில் குறைபாடுகள் இருந்தாலும், அதில் பெரும் முன்னேற்றம் உள்ளது. நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்குகின்றன. சட்டவாட்சியை வலுப்படுத்தி நாடென்ற ரீதியில் முன்னேறிச் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது - என்றார்.

பெண்ணைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்கு சென்றுள்ளார். இதன்போதே அந்தப் பெண்ணை வேட்பாளரான பகீரதன் தாக்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான பெண் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்தார். இதையடுத்து வேட்பாளரை பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். (ச)

வண்ண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம், பல வர்ணங்களில் தலை முடி, வித்தியாசமான அலங்காரம், நீதிமன்றுக்கு ஒவ்வாத ஆடையுடன் சமுகமளித்த அவர், நீதிமன்றக் கூண்டிலும் ஒவ்வாத முறையில் செயற்பட்டார். இவற்றை அவதானித்த நீதிபதி அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் பதியுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, இளைஞருக்கு எதிராக விசாரணை இடம்பெற்றது. முடிவில் நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக மூன்று மாத கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.(ச)

மதுரவீரன் பின்வாங்கியது

சென்னை, ஜன.12

தமிழர் பண்டிகையான பொங்கலை முன்னிட்டு தமிழ் சினிமாவில் 4 முக்கிய படங்கள் ரிலீஸாக இருந்தன. இதில் சூர்யா நடிப்பில் தானா சேர்ந்த கூட்டம், விக்ரம் நடித்துள்ள ஸ்கெட்ச், பிரபு தேவா நடித்திருக்கும் குலேபகாவலி ஆகியன வெளியாவது உறுதியாகிவிட்டது.

இதில் விஜயகாந்த் மகன் சண்முகவேல் நடித்திருக்கும் மதுரவீரன் படத்தை தற்போது தள்ளிவைத்துள்ளார்கள். ஜல்லிக்கட்டை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இந்தப்படம் பொங்கலை குறிவைத்து வெளியாக இருந்தநிலையில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பெரிய ஹீரோக்களின் படங்களால் இப்படத்துக்குப் போதுமான தியேட்டர்கள் கிடைக்கவில்லையாம். இதனால் படத்தை வரும் ஜனவரி 19 ல் ரிலீஸ் செய்ய முடிவு செய்துள்ளார்கள். (அ)

அகதி இளைஞன் மீது ஆடிப்பாடிய கும்பல்

லண்டன்,ஜன.12

பிரிட்டனில் 17 வயதான அகதி ஒருவர் மீது 12 பேர் கொண்ட கும்பல் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியதில் குறித்த அகதி இளைஞன் படுகாயமடைந்தார்.

லண்டனில் உள்ள குராய்டான் நகரில் உள்ள மதுபான விடுதியிலிருந்து ரேகர் அஹமட் என்ற குர்திஷ் அகதி கடந்த மார்ச் 31 ஆம் திகதி வெளியேறி வீதியில் சென்று கொண்டிருந்தார். அப்போது மதுபான விடுதியிலிருந்து வெளியேறிய 12 பேர் கொண்ட கும்பல் அஹமட்டைப் பின் தொடர்ந்து சென்று, அவரை வழிமறித்து கீழே தள்ளிச் சரமாரியாக தாக்கியுள்ளனர். ஒருகட்டத்தில் அவர் மீது குறித்த 12 பேரும் ஆடிப்பாடியுள்ளனர். இதில் படுகாயமடைந்த அஹமட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அஹமட்டுக்கு மூளையில் ரத்த கசிவு, முதுகு எலும்பு முறிவு, மற்றும் முகத்தில் முறிவுகள் ஏற்பட்டுள்ளன. அவரைத் தாக்கியவர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (அ)

கழிவறையில் கணவனை
சுட்டுக்கொன்ற மனைவி

வோஷிங்டன், ஜன.12

அமெரிக்காவில் கழிவறையில் இருந்த கணவன், தனது வார்த்தைகளுக்கு செவி கொடுக்கவில்லை என்பதால் மனைவி அவரைச் சுட்டுக்கொலை செய்துள்ளார்.

அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது கணவர் கழிவறையில் இருக்கும்போது, அவரிடம் ஏதோ சொல்ல முற்பட்டார். ஆனால் இதற்குக் கணவர் செவிசாய்க்கவில்லை.மறுபடியும், பேசிப்பார்த்துள்ளார், ஆனால் அவர் பதில் அளிக்காத காரணத்தால், துப்பாக்கியை எடுத்துக் கழிவறையின் சுவரை நோக்கி விளையாட்டாக இரண்டு முறை சுட்டுள்ளார். ஆனால், விபரீதமாக குண்டுகள் கணவனின் தலையைத் தாக்கி அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பாக அந்தப்பெண்ணின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (அ)

தமிழ்நாடு-50 கொண்டாட முடிவு

சென்னை, ஜன.12

சென்னை மாகாணம் என்ற பெயரை தமிழ்நாடு என மாற்றியமைத்து 50 வருடங்கள் நிறைவடைந்ததையொட்டி 'தமிழ்நாடு பொன் விழா ஆண்டு' கொண்டாடப்படும் எனத் தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

"இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, மாநிலப் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணம் என்னும் பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றவேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசின் முன் 1956, ஜூலையில் கோரிக்கையினைக் தியாகி சங்கரலிங்கனார் முன்வைத்தார்.

பேரறிஞர் அண்ணா தலைமையிலான அரசு அமைந்தவுடன், 1967-ஆம் ஆண்டு அப்போதைய "சென்னை மாகாணத்துக்கு" 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 1969ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் ஆம் திகதி 'தமிழ்நாடு' என்று நமது மாநிலத்துக்கு பெயர் சூட்டப்பட்டது.

2018 ஜனவரி 14-ஆம் திகதி, வரலாற்றுச் சிறப்பு மிக்க நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரோடு 50 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு 'தமிழ்நாடு' பொன் விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில்தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" என்று அவர் தெரிவித்தார். (அ)

ரோஜா காதில் பூ

ஆந்திரா, ஜன.12

ஆந்திர மாநிலம் புத்தூரில் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கு எதிராக நடிகை ரோஜா தனது ஆதரவாளர்களுடன் காதுகளில் பூக்களை வைத்துக் கொண்டு நூதன ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டார்.

வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் ஆந்திர மாநில மகளிர் அணித் தலைவியாக நடிகை ரோஜா உள்ளார். நகரி தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினரான இவர், தனது ஆதரவாளர்களுடன் புத்தூரில் நூதன ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டார். அப்போது அனைவரும் தங்களது காதுகளில் பூ வைத்திருந்தனர்.

அவர் பேசும்போது, "கடந்த 2014 இல் நடைபெற்ற ஆந்திரத் தேர்தலின் போது, பல்வேறு வாக்குறுதிகளை சந்திரபாபு நாயுடு வழங்கினார். ஆனால் முதல்வரான பிறகு சந்திரபாபு தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ஆட்சியைப் பிடிக்க அவர் எல்லோரையும் ஏமாற்றி உள்ளார். ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகியும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து பெறவும் தவறி விட்டார். இவருக்கு தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள்" என்றார். (அ)

முஸ்லிம் – இந்து காதல்
மிரட்டலால் யுவதி சாவு

கர்நாடகா, ஜன.12

முஸ்லிம் இளைஞனைக் காதலித்ததால், பா.ஜ.கவின் மிரட்டலால் யுவதி ஒருவர் தற்கொலை செய்துள்ளார். அவரை மிரட்டிய பா.ஜ.கவினரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கர்நாடக மாநிலம், சிக்கமகளூரைச் சேர்ந்த இந்து யுவதியான தன்யாவுக்கும், அங்குள்ள தனியார் கல்லூரியில் படிக்கும் இஸ்லாமிய இளைஞருக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தன்யா தனது நண்பன் சந்தோஷுடன் வாட்ஸ் அப்பில் உரையாடியபோது, 'ஐ லவ் முஸ்லிம்' என செய்தி அனுப்பியுள்ளார்.

இதற்கு சந்தோஷ், 'இஸ்லாமியர்களுடன் பழக வேண்டாம்' என எச்சரித்துள்ளார். மேலும் தன்யா அனுப்பிய குறுஞ் செய்தியை ஸ்கிரீன் ஷொட் எடுத்து பா.ஜ.க, பஜ்ரங்தளம் உள்ளிட்ட இந்துத்துவ அமைப்புகளில் உள்ள தனது நண்பர்களுக்கும் அவர் அனுப்பியுள்ளார்.

இதையடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த பா.ஜக நிர்வாகி அனில் ராஜ், பஜ்ரங் தளம் நிர்வாகி சந்தோஷ் உள்ளிட்ட 5 பேர் தன்யா வீட்டுக்குச் சென்று, இஸ்லாமிய இளைஞருடனான காதலைக் கைவிடுமாறு மிரட்டியுள்ளனர். மேலும் தன்யாவின் காதல் குறித்து பேஸ்புக்கிலும் அவதூறு பரப்பினர். இதனால் மனமுடைந்த தன்யா கடந்த 6 ஆம் திகதி கடிதம் எழுதிவைத்து விட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதையடுத்து தன்யாவின் தற்கொலை தொடர்பாக , அவரை மிரட்டிய பா.ஜ.கவினரை பொலிஸார் தேடி வருகின்றனர். (அ)

'இஸ்ரோ' தலைவராக தமிழர்

சென்னை, ஜன.12

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவராக தமிழகத்தின் சிவன்.கே நியமிக்கப்பட்டுள்ளார்.

'இஸ்ரோ' தலைவர் கிரண் குமாரின் பதவிக் காலம் முடிவதைத் தொடர்ந்து புதிய தலைவராக சிவன்.கே நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இப்போது விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருக்கிறார்.

தமிழரான இவர் இஸ்ரோ நிறுவன இயக்குநராகத் தெரிவானதற்கு பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (அ)

எல்லாப் புகழும் ட்ரம்புக்கே!

சியோல், ஜன.12

வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை ஏற்பட அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தான் முழுக் காரணம் என தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக்கில் வடகொரியா பங்கேற்க உள்ளது என்று 2 ஆண்டுகளுக்குப் பிறகு செவ்வாய்க்கிழமை நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு நாடுகளும் அறிவித்தன.

ஐ.நா.வின் கடும் எதிர்ப்பையும் மீறி, வடகொரியா தொடர்ந்து அணுகுண்டு மற்றும் ஏவுகணை சோதனையில் ஈடுபட்டது. இதனால் கடந்த இரு ஆண்டுகளாக வடகொரியா, தென்கொரியா இடையே மோதல் போக்கு நிலவுகிறது. இதன் தொடர்ச்சியாக, தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன. இதனால் கொரியத் தீபகற்பப் பகுதியில் பதற்றம் நிலவி வந்தது.

வடகொரியா, அமெரிக்கா இடையே கடும் வார்த்தைப் போர் நடைபெற்றது.

இந்த நிலையில், தென் கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கள் நாடும் பங்கேற்க விரும்புவதாக வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் கடந்த புத்தாண்டு தினத்தில் அறிவித்தார். இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்த உயர் அதிகாரிகளை அனுப்பத் தயார் என்றும் தெரிவித்தார். இதற்கு தென்கொரியாவும் சம்மதம் தெரிவித்தது.

இதையடுத்து, இருநாட்டு எல்லையில் தென்கொரியப் பகுதியில் உள்ள அமைதி கிராமமான பன்முஞ்சோமில் இருநாட்டு பிரதிநிதிகள் இடையே நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் தென்கொரியாவின் ஒருங்கிணைப்புத் துறை அமைச்சர் சோ மியோங்-கியோன், வடகொரியாவின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் ரி சன் க்வான் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

இதன் முடிவில், குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக தங்கள் நாட்டு வீரர்களை அனுப்பி வைக்க வடகொரியா ஒப்புக் கொண்டது.

இந்த நிலையில் வடகொரியாவுடனான பேச்சுவார்த்தை குறித்து தென்கொரியா அதிபர் மூன் ஜே இன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை ஏற்பட ட்ரம்ப் பெரிதும் உதவினார். அவருக்குத்தான் இந்த விடயத்தில் முழுப்புகழும்.தென் கொரியா - வடகொரியா இடையே இந்தப் பேச்சுவார்த்தையின் மூலம் அணுசக்தி தொடர்பான வடகொரியாவின் அணுஆயுத சோதனைகளை நிறுத்துவதுதான் முக்கிய நோக்கம். இதில் நமது அடிப்படை நிலைப்பாடு ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்படாது" என்று தெரிவித்தார். (அ)

ஜிவா அலை

புதுடெல்லி, ஜன.12

இந்தியக் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனியின் மனைவி சாக்ஷி மற்றும் மகள் ஜிவா இருவரும் இருக்கும் புகைப்படம் ஒன்று, சமூக வலைத்தளத்தில் தற்போது வைரலாகி வருகிறது.

இந்தியக் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனியின் மகள் ஜிவாவுக்கு, சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் ஏராளம். ஜிவா செய்யும் சிறு சிறு வேலைகளையும், சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் கொண்டாடுவது வழக்கம். சமீபத்தில் கூட ஜிவா, மலையாளப் பாடலைப் பாடியது, தனது மழலைக் குரலில் கிறிஸ்மஸ் வாழ்த்துக் கூறியது, தனது தந்தை டோனியுடன் சேர்ந்து சப்பாத்தி உருட்டியது என ஜிவாவின் வீடியோக்கள் வைரலாகின.

தற்போது, ஜிவா மற்றும் சாக்ஷி இருக்கும் புகைப்பட்த்தை, டோனி இன்ஸ்டாகிராமில் பதிவிட்டார். பதிவிடப்பட்ட சிறிது நேரத்திலேயே லட்சத்துக்கும் அதிகமானோர், இந்தப் புகைப்படத்தினை "லைக்" செய்ததால், இணையத்தளத்தில் இந்த புகைப்படம் வைரலாகி வருகிறது. (அ)

மீண்டும் சங்கா



கொழும்பு, ஜன.12

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான குமார் சங்கக்கார எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி முதல் 11 வரை ஹொங் கொங்கில் நடைபெறவுள்ள ரி-20 பிலிட்ஸ் போட்டித் தொடரில் கெலெக்ஸி கிளெடியேட்டர்ஸ் அணிக்காக மீண்டும் விளையாடவுள்ளார்.

கடந்த வருடமும் கெலெக்ஸி கிளெடியேட்டர்ஸ் அணிக்காக விளையாடியிருந்த சங்கக்கார, அவ்வணியின் தலைவராகச் செயற்பட்ட அன்சுமன் ராத்துக்கு ஆலோசகராகவும் செயற்பட்டிருந்தார். இதன் காரணமாக அந்தநாட்டு உள்ளூர்ப் போட்டிகளில் கடந்த வருடம் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராகவும் அவர் மாறினார். எனினும், அவர் இம்முறை போட்டித் தொடரில் சிட்டி கைடெக் அணிக்காக அன்சுமன் ராத் விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஹொங் கொங் ரி-20 போட்டித் தொடரில் மீண்டும் விளையாடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமை தொடர்பில் சங்கக்கார ஆவலுடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (அ)

கடைசி நேரக் கோல் வென்றது மன்செஸ்டர்

லண்டன், ஜன.12

இங்கிலாந்து உதைபந்தாட்ட லீக் (ஈ.எவ்.எல்) கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியொன்றின் முதலாவது போட்டியில் மன்செஸ்டர் சிற்றி வென்றுள்ளது.

மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில், இலங்கை நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை இடம் பெற்ற போட்டியில், மாற்று வீரராகக் களமிறங்கிய சேர்ஜியோ அகுரோ, போட்டியின் இறுதிக் கணத்தில் பெற்ற கோல் காரணமாகவே, ஆரம்பத்தில் ஒரு கோல் பின்தங்கியிருந்தபோதும் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது.

காலிறுதிப் போட்டியில், மன்செஸ்டர் யுனைட்டெட்டை வென்று அரையிறுதிக்கு வந்த பிறிஸ்டல் சிற்றி, இந்தப்போட்டியிலும் மிகச் சிறப்பாக விளையாடியது.

முதற்பாதி முடிவடைய இருக்கும் நேரத்தில், மன்செஸ்டர் சிற்றியின் பின்கள வீரர் ஜோன் ஸ்டோன்ஸால், பிறிஸ்டல் சிற்றியின் மத்தியகள வீரர் பொபி றீட் வீழ்த்தப்பட அவ்வணிக்கு பெனால்டி வழங்கப்பட்டது. அதனை பொபி றீட் கோலாக்க முதற்பாதி முடிவில் பிறிஸ்டல் சிற்றி முன்னிலையிலிருந்தது.

எனினும், மன்செஸ்டர் சிற்றியின் கோல் காப்பாளர் கிளாடியோ பிராவோவிடமிருந்து பந்தைப் பெற்ற மத்தியகள வீரர் கெவின் டி ப்ரூனே, பந்தை பெனால்டிப் பகுதியை நோக்கி கொண்டு வந்து முன்கள வீரர் ரஹீம் ஸ்டேர்லிங்கிடம் வழங்க, அவர் அந்தப்பந்தை கெவின் டி ப்ரூனேயிடம் வழங்க, கோல் கம்பத்திலிருந்து 16 அடி தூரத்திலிருந்து இரண்டாவது பாதி ஆரம்பமான 10ஆவது நிமிடத்தில் கோலைப் பெற்ற கெவின் டி ப்ரூனே கோல் எண்ணிக்கையை சமப்படுத்தினார்.

இந்நிலையில், இப்போட்டி சமநிலையில் முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், போட்டியின் இறுதிக் கணத்தில், மத்தியகள வீரர் பெர்ணார்டோ சில்வா கொடுத்த பந்தை தலையால் முட்டி முன்கள வீரர் சேர்ஜியோ அகுரோ கோலாக்க, 2-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. (அ)

முதல்வன் நடால்

சிட்னி, ஜன.12

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடருக்கான தரவரிசையில் நடால் முதலிடமும், பெடரர் 2 ஆவது இடமும் பிடித்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டுக்கான முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான அவுஸ்திரேலிய பகிரங்கத் தொடர் ஜனவரி 15 ஆம் திகதி தொடங்கி 28 ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்தத் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கு தரவரிசை வழங்கப்பட்டு அதன்படி போட்டி அட்டவணை தயாரிக்கப்படும். இதனடிப்படையில் ஆண்கள் ஒற்றையருக்கான பிரிவில் ரபேல் நடால் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

நடப்புச் சாம்பியன் பெடரர் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார். கடந்த வருடம் காயத்தால் நீண்ட நாட்கள் விளையாடாமல் இருந்ததால் பெடரர் 17-வது இடம் பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் விலகியதால் சிமோனா ஹாலேப் முதல் இடத்தை பிடித்துள்ளார். கரோலின் வோஸ்னியாக்கி 2ஆவது இடத்தையும், முகுருசா 3 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 12.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.